S6

# படிமுறை 6: பணியினைத் திட்டமிடல்: (அ) திட்டமொன்றை அமைத்தல்

வாண்மையாளர்களின் வெற்றிக்கான செய்முறைகளில் அவர்கள் வெறுமனே குழம்பிக்கொண்டிராமல் பதிலாக தங்கள் வேலையை முதலில் திட்டமிடுவர். நீங்களும் இதற்குப் பழகிக்கொள்ளவும்! திட்டமிடலை வெவ்வேறு நிலைகளில் செய்யமுடிவதுடன் கட்டாயம் செய்யவும் வேண்டும்:

## மாதாந்தத் திட்டமிடல்

உங்களுக்கு மூன்று கிழமைகளில் ஓர் எடுத்துரைப்பு நடத்த வேண்டும் அல்லது ஒரு பெரிய கணிதத் தேர்வு நடைபெற இருக்கிறது என்றால் அதை முன் கூட்டியே அந்தக் காலம் வரை திட்டமிடுவது நல்லது எனப் பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வகையில் நீங்கள் உங்களது கட்டுப்பாட்டின் கீழ் வேலையைக் கொண்டு வந்து மிக எளிதாக இலக்கை அடைய முடியும்.

## வாராந்தத் திட்டமிடல்

கிழமை அட்டவணையில் நீங்கள் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு பரப்பினை அமைக்கவும். அதிலே நீங்கள் என்ன வீட்டுப்பாடங்களை எந்த நாளில் செய்யப் போகிறீர்கள் என்பதையும், அத்துடன் நீங்கள் எப்போது தேர்வு அல்லது வீட்டுப்பாடத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதையும் எழுதவும். கிழமை அட்டவணை உங்களுக்கு ஒரு நல்ல கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது மற்றும் நேரத்தை நீங்கள் ஒழுங்கமைக்கவும் துணைசெய்கிறது.

## நாளாந்தத் திட்டமிடல்

ஒவ்வொரு நாளுக்குமான அட்டவணையுடன் நீங்கள் ஒவ்வொரு நாளும் வீட்டுப்பாட நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும், என்ன ஒழுங்கில் திட்டமிட்ட பணிகளைச் செய்து முடிக்க வேண்டும் என்பதையும் திட்டமிடவும்.

குறிப்பு

பள்ளியில் ஓர் வீட்டுப்பாடக் கையேட்டை வைத்திருக்கவும். அதில் எந்நாளில் எந்த வீட்டுப் பாடத்தை எப்போது செய்து முடிக்க வேண்டுமென்பதை மிகக் கண்காணிப்புடன் பதிவு செய்ய வேண்டும். உண்மையில் இதனை ஒரு நிகழ்ச்சி நிரலுடனும் செய்யலாம். இது சரியாக அமைவதை உறுதிப்படுத்தவும். இது உங்கள் வேலைத் திட்டத்தின் மிக இன்றியமையாத அடித்தளமாகும்.



## வாராந்தத்திட்டம்: மார்ச் 12 –17

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி ூ ஞாயிறு |
|---|---|---|---|---|---|
| – மொழிநூல் பக்.117<br><br>– படித்தல் ூ வினா விடைகள்<br><br>– அலகு 17 கற்றல்<br><br>கங்காரு எடுத்துரைப்பை ஏற்பாடு செய்தல்<br><br>பிரஞ்சு சொற்கோவைப் பயிற்சி<br><br>கணிதநூல் பக்.43 | – கணிதநூல் பக்.44<br><br>– ஆங்கிலத் தேர்வுக்கான பயிற்சி<br><br>– மொழித்தாள் இல. 34<br><br>கணிதநூல் பக்.45<br><br>பணித்தாள் | கங்காரு எடுத்துரைப்பை ஏற்பாடு செய்தல்<br><br>– வடிவியல் தாள் A 42<br><br>– கணிதநூல் பக் 47+48<br><br>– அலகு 17 கற்றல் | கங்காரு எடுத்துரைப்பு<br><br>வடிவியல் A 43+44<br><br>– ஆங்கிலத் தேர்வுக்கான பயிற்சி<br><br>– மொழிநூல் பக்.123<br><br>கவிதை மனப்பாடம் செய்தல் | – ஆங்கிலத் தேர்வு<br><br>– மொழிநூல் பக்.125<br><br>– பிரஞ்சு தேர்வு<br><br>கவிதை மனப்பாடம் செய்தல்<br><br>கணிதம் A 23 | – அலகு 17 மீட்டல்<br><br>வடிவியல் A 43 மீட்டல் |

**குறிப்பு**

ஒவ்வொரு நாளும் ஒரு A4 தாளில் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை (வீட்டுப்பாடங்கள், தேர்வுக்கு ஏற்பாடுகள்,.. முதலியன) பதிவு செய்யவும். உங்களுக்கு வேறு வீட்டுப்பாடங்கள் இல்லையாயின், பள்ளியிலிருந்து ஏதாவதொன்றினை மீட்டல் அல்லது பயிற்சி செய்ய எடுத்து வரவும்!

### பயிற்சி 6

மாத மற்றும் கிழமை அட்டவணை வேலையைத் தெரிந்து கொள்ளும் வகையில், பின்வருமாறு செய்யுங்கள்

1. உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த அனைத்து காலக்கெடுக்கள், தேர்வுகள் முதலியனவற்றை மாதந்தத் திட்டத்தில் பதிவு செய்க. இசைப்பாடங்கள், காற்பந்துப் பயிற்சி போன்றவற்றையும் பதிந்து கொள்ளவும். நீங்கள் முற்கூட்டியே உங்களது வீட்டுப்பாடத்தை முடிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

2. அடுத்த கிழமைக்கான கிழமை அட்டவணை (ஒரு அட்டவணை ஆறு பரப்புக்களுடையது திங்கள் முதல் வெள்ளி வரை மற்றும் சனி ∴ ஞாயிறு). உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த அனைத்து வீட்டுப்பாடங்களையும் பதிவு செய்யவும்.

